RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s-222931

# வழிநடத்தும் தோழி

**அ. ஏஞ்சல் ராணி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி-626123, தமிழ்நாடு, இந்தியா.

# Guiding Friend

**A. Angel Rani [a, *]**

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626123, Tamil Nadu, India

* Corresponding Author: angelrani21102009@gmail.com

Received: 15-09-2022
Revised: 14-11-2022
Accepted: 20-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature is a subtle depiction of the sentiments of the Aghamandars. Friend is a character that was found in all Sangam literary works who guides and helps both hero and heroine in love life. In the context characters like friend, hero, heroine,etc. are included. The hero and heroine excelled in wealth and the friend leads in the areas of speech and action, while the best friend excels in leadership, which is one of the best qualities mentioned by psychologists. The aim o, f this study is to study the nature of the guiding friend from a psycological point of view.

**Keywords:** Sangam literature, Friend, Aghamandars, Hero and Heroine

## முன்னுரை

அகமாந்தர்களின் உணர்வுகளை நுட்பமாக சித்தரிப்பவை சங்க இலக்கியம் ஆகும். சங்கஇலக்கியங்களில் காணப்படும் தோழி, தலைவன், தலைவியை நன்கு நெறிப்படுத்துகின்ற பாத்திரமாகத் திகழ்கின்றாள். அகப்பொருளில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் முதலியோர் இடம் பெறுகின்றனர். தலைவனும், தலைவியும் செல்வநிலைத் தன்மையில் ஓங்க தோழி சொல் செயல் துறைகளில் தலைமை தாங்குகிறாள். அத்துணை சிறந்த தோழி உளவியலாளர் குறிப்பிடும் சிறந்தப் பண்புகளில் தலை சிறந்த பண்பான வழிநடத்துதலில் சிறப்பு வாய்ந்தவளாகத் திகழ்கிறாள். அவ்வழிநடத்தும் தோழியின் தன்மையை உளவியல் நோக்கில் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## வழிநடத்தல்

'சிறந்த வழி நடத்திச் செல்லும் திறன் ஒருவரது ஆளுமைப் பண்பிற்குச் சிகரமாக விளங்குகிறது. அவருக்குப் பல்வேறு வெற்றிகளைத் தேடித் தருகிறது" என்று எஸ்.சுந்தர சீனிவாசன் தனது ஆளுமை மேம்பாடு என்னும் நூலில் குறிப்பிடுகின்றார் (Sundara Seenuvasan, 2008).

தோழி, தலைவன் தலைவி இருவரின் களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்க்கையின் நிறைவு வரை வழிநடத்திச் செல்கிறாள். களவில் குறியிடந்துய்த்தல், வரைவு கடாதல், உடன்போக்கு, இற்செறிப்பு ஆகிய பல்வேறு துறைகளில் வழி நடத்தி செல்கிறாள். தலைவியை புணரத் தலைவன்

பகல் பொழுதில் வருகிறான். ஆனால் தோழியிடம் இரவுக்குறியும் வேண்டுகிறான். தோழி அவனுக்கு இரவுக்குறியிடமும் கூறி வழிநடத்துகின்றாள்.

"இனிதேதெய்ய, எம் முனிவு இல் நல் ஊர்

இனிவரின் தவறும் இல்லை எனையதூஉம்

பிறர் பிறர் அறிதல் யாவது

தமர் தமர் அறியாச் சேரியும் உடைத்தே" (Parimanam & Balasubramaniyam, 2004a)

தலைவி, தலைவனிடம் உடன்போக்கிற்கு நேர்கிறாள். தலைவன், சுரத்தின் வெம்மையையும் தலைவியின் மென்மையையும் எடுத்துரைத்து மறுக்கிறாள். தோழி, தலைவனிடம் மரத்தின் கிளைகளை வலிமையில்லாமையால் தன்கையால் வளைத்துப் பிளக்க முடியாமல் வருந்தும் யானை உள்ள காடும் கூட தலைவிக்கு, உன்னுடன் இருக்கும்போது இன்பமே தரும் என்கிறாள்.

"யானை கைம்மடித்து உயவும்

கானமும் இனியஆம், நும்மொடு வரினே" (Parimanam & Balasubramaniyam, 2004b)

என்ற பாடலில் தோழி தலைவன், தலைவி இருவரையும் உடன்போக்கிற்கு வழிநடத்தி செல்வதை அறிய முடிகிறது.

தலைவன் தலைவியைச் சந்திக்கப் பகற்பொழுதில் வந்தான். அவனைக் கண்ட தோழி, நாங்கள் இனித் தினைப்புனம் காப்பதற்கு வர இயலாது. எனவே நீ தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள் என்று வரைவு கடாவுதலை,

"குன்றக் குறவன் காதல் மட மகள்,

மென் தோட் கொடிச்சியைப் பெறற்கு அரிதில்ல

கைம் புறப்படு கிளி ஓப்பலர்

புன் பல மயக்கத்து விளைந்தன தினையே!" (Parimanam & Balasubramaniyam, 2004c)

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. தோழி தினைப்புனம் காவல் செய்ய இனி நாங்கள் வர இயலாது. எனவே தலைவனே விரைவில் திருமணம் செய்து கொள் என்று திருமணத்திற்கு வழி நடத்துவதை காண முடிகிறது.

வழிநடத்துபவர் நிர்வாகியாகவோ, தலைவராகவோ, சட்டப்படி இல்லாவிட்டாலும் அவர் சொற்படியும் கருத்துபடியும் பிறர் செயல்பட அவரது வழிநடத்தும் திறன் அவருக்கு உதவுகிறது. வழிநடத்தும் ஆற்றலில் கீழ்காணும் பண்புகள் அடங்கியுள்ளன.

நம்பிக்கை, தளரா நோக்கு, பிறர்பால் அக்கறை, முடிவெடுத்தல், பொறுமை, நம்பிக்கையூட்டல், திட்டமிடல், தெளிவு ஆகியவை ஆகும். மேற்காணும் வழிநடத்தும் ஆற்றல்கள் தோழியிடமும் காணப்படுகிறது.

## நம்பிக்கை

ஒருவன் தன்னுடைய இலக்குகள் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். தன்மேல், தன்னுடன் இருப்பவர் மேல், இறைவன் மேல் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.

அகஇலக்கியத் தோழி நம்பிக்கைக்குரியவளாகவும், பிறரை நம்பக் கூடியவளாகவும் உள்ளாள். தலைவன் பொருள் தேடி பிரிந்து சென்று, திரும்பி வந்து தலைவி ஆற்றியிருந்தமையை எண்ணி மகிழ்கின்றான். தோழியிடம் தலைவியை நீ 'நன்கு ஆற்றுவித்தாய்| என்று நன்றி தெரிவிக்கின்றாள். அதற்கு தோழி, நான் ஒன்றும் செய்யவில்லை. காக்கை கரைதலைத் தலைவன் வரவுகுறித்த நன்னிமித்தமாக கொண்ட தலைவி மகிழ்ந்தாள்.

"என் தோழி

பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (Parimanam & Balasubramaniyam, 2004b)

தலைவன் விரைந்து வருவான் என்பதை அறிவிப்பது போல, காக்கை கரைந்து நம்பிக்கைத் தந்ததாகவும், நம்பி தலைவி இருந்ததாகவும் கூறி, பிறரையும் நம்பக்கூடியவளாகத் தோழி உள்ளாள் என்பது புலனாகிறது.

தலைவனும் தலைவியும் களவில் ஈடுபட்டு இருப்பதை தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்றல் துறை மூலம் உணர்த்துகிறாள். ஆனால் தலைவன் அதன் பின்னும் வரைய முற்படவில்லை. அதனால் செவிலி, வேறுறொரு குலமகளை தலைவன் மணப்பானோ என்று ஐயுற்றாள். இதனை அறிந்த தோழி, தலைவன் வேறொரு குலமகளை மணந்தால் அவனால் விரும்பப்பட்ட நம் தலைவியின் தோள்கள் அடையும் பயனை அவன் நன்கு அறிவான். எனவே அவ்வாறு அவன் செய்யமாட்டான் என்று தலைவனை தோழி நம்புவதை,

"அன்னை, வாழி! வேண்டு, அன்னை! கழிய

முண்டகம் மலரும் தண் கடற் சேர்ப்பன்

எம் தோள் துறந்தனன் ஆயின்,

எவன்கொல் மற்று அவன் நயந்த தோளே?" (Parimanam & Balasubramaniyam, 2004c)

என்ற பாடலின் மூலம் வெளிப்படுத்துகின்றாள். மேலும் தலைவியின் களவு வாழ்க்கை தோழியின் உதவியினாலே வளர்ந்து வருகிறது. தலைவனும், தலைவியும் தோழியிடமே குறியிடம் கேட்கின்றனர். தோழி தமது களவு வெளிப்படாவண்ணம் பகற்குறி, இரவுக்குறி நிகழ்த்துவாள் என்று தலைமக்கள் இருவரும் அவளை நம்புகின்றனர்.

தோழி பிறரை நம்பக்கூடியவளாகவும், பிறரால் நம்பப்படுபவளாகவும் புலவர்களால் படைக்கப்பட்டுள்ளாள். மனிதன் அனைவரிடமும் இருக்கும் சந்தேகமின்றி நம்பிக்கைக்குரியவளாகத் தோழி விளங்குகின்றாள்.

## தளரா நோக்கு

ஒருவனின் இலக்கு நன்மை தரக்கூடியது. அதற்கு விடா முயற்சியுடன் பாடுபட வேண்டும் என்ற எண்ணமே தளராநோக்கி ஆகும்.

தோழி இலக்கு தலைவியின் களவினை கற்பாக மாற்ற வேண்டும் என்ற எண்ணமே ஆகும். அதற்காக அவள் பல முயற்சிகளை மேற்கொள்கிறாள். தலைவன், தலைவியின் களவானது வளர்ச்சியடைவதற்கு குறியிடம் கூறல், தலைவியை திருமணம் செய்யுமாறு தலைவனை வரைவு கடாதல், தலைவியின் களவினை தமர் அறியசெய்யுமாறு செவிலியிடம் அறத்தோடு நிற்றல், தலைவியின் களவினை பெற்றோர் ஏற்றுக்கொள்ளாத போது உடன்போக்குவித்தல் என்று தோழி தனது இலக்கை அடைய பல முயற்சிகளை மேற்கொள்கிறாள்.

இரவுக்குறியில் தலைவியை சந்திக்க தலைவன் வருகிறான். தலைவி அவனை ஏற்க மறுக்கின்றாள். தலைவன் பல ஏதங்களைக் கடந்து உன்னை சந்திக்க வந்துள்ளான். வழியின் இடையூறுகளுக்கு அஞ்சாமல் அவன் வரும் போது, அவன் வருகையால் தோன்றும் குற்றங்களுக்கு நாணி நாம் மறுத்தல் அழகன்று எனத் தோழி உரைக்கின்றாள்.

'ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்,

சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்

தொல்முரண் சொல்லும் துன் அருஞ் சாரல்,

நடுநாள் வருதலும் வரூஉம்,

வடுநாணலமே - தோழி! - நாமே" (Parimanam & Balasubramaniyam, 2004b)

தலைவன், தலைவி இருவரின் களவு வாழ்வின் வளர்ச்சிக்கு, தலைவியை இரவுக்குறி ஏற்க செய்யும் தோழியின் தளரா நோக்கு பண்பு சிறப்பிற்குரியது.

தலைவன் பகற்குறியில் தலைவியைச் சந்திக்க வருகின்றான். அவனை தோழி குறியிடத்தில் சந்தித்து வரைவு கடாவுகிறாள். நீயும் தலைவியும் சந்திக்கும் இப்புன்னை மரம், நாங்கள் பால்வார்த்து வளர்த்த மரமாகும். இம்மரத்தை அன்னை உங்கள் தங்கை என்று கூறினாள். எனவே அம்மரத்தின் கீழ் நீங்கள் சந்தித்தால் எங்கள் தங்கை களவினை அறிவாள். எனவே குறியிடத்தில் சந்திப்பதை விடுத்து வரைவு மேற்கொள் என்று தலைவனை தோழி வரைவுகடாவுகின்றாள்.

“விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி

மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,

‘நெய் பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது

நும்மினும் சிறந்தது, நுங்கை ஆகும்| என்று,

அன்னை கூறினள், புன்னையது நலனே

அம்ம! நாணுதும், உம்மொடு நகையே

விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப,

வலம்புரி வான்கோடு நரலும் இலங்கு நீர்த்

துறை கெழு கொண்க! - நீ நல்கின்,

இறைபடு நீழல் பிறவுமார் உளவே" (Parimanam & Balasubramaniyam, 2004a)

‘நாணுதும், உம்மொடு நகையே| என்று கூறியமையால், வரைந்து கொள்ளலே தக்கது என்றுரைத்து அவளது இலக்கை அடைய மேற்கொள்ளும் முயற்சி போற்றுதற்குரியது.

தலைவியின் களவினை அறிந்த தோழி, தலைவியிடம் இரவுக்குறி மேற்கொள்ளச் செய்கின்றாள். அதேபோல் குறியிடங்களை மாற்றியும் அமைக்கின்றாள். தலைவியின் களவினை கற்பாக மாற்றத் தோழி, தளரா நோக்குடன் செயல்படுகின்றாள்.

### 1.3. பிறர்பால் அக்கறை

மனிதன் தன்னுடன் இருப்பவர்கள் மீது அக்கறை காட்டுவது இயல்பு. தோழியும் தலைவன், தலைவி மீது மிகுந்த அக்கறை உள்ளவளாக காட்சியளிக்கின்றாள். தலைவன் பொருள் தேடி பிரிவு மேற்கொள்ள நினைக்கின்றான். இதனை அறிந்த தோழி பிரிவை விலக்குகின்றாள். ஆனால் தலைவன் பிரிந்து செல்லுதலையே உள்ளத்துக் கொண்டிருந்தான். அதற்கு தோழி நீ பிரிந்து சென்றால் தலைவி இறந்துபடுவாள் என்று கூறி தலைவி மீது இரக்கம், கொண்ட அக்கறையை வெளிப்படுத்துகின்றாள்.

'செல் இனிச் சென்று நீ செய்யும் வினை முற்றி,

அன்பு அறமாறி, ‘யாம் உள்ளத் துறந்தவள்

பண்பும் அறிதிரோ?| என்று, வருவாரை

என்திறம் யாதும் வினவல் வினவின்,

பகலின் விளங்கு நின் செம்மல் சிதைய

தவல் அருஞ் செய்வினை முற்றாமல், ஆண்டு ஓர்

அவலம் படுதலும் உண்டு" (Parimanam & Balasubramaniyam, 2004d)

வினைமுற்றி திரும்பி வந்து தலைவனே, தலைவியைப் பற்றி வினவாதீர். வினவுவையாயின் அவள் இறந்துபட்ட செய்தியை அறிந்து வருந்துவீர் என்று தலைவனிடம் தோழி கூறுகின்றாள். தலைவி மீது தோழி கொண்ட அக்கறை புலனாகிறது.

தோழி கூற்றில் அமையும் அறத்தோடு நிற்றல் துறை அனைத்தும், தலைவி மீது கொண்ட அக்கறையால் அமைந்தவையே. அதற்கு சிறந்த சான்றாக குறிஞ்சிப்பாட்டு முழுமையும் கூறலாம்.

தாயே, என் தோழியாகிய தலைவியின் உடல் மெலிவைக் கண்டு, போக்குதற்கு அரிய கொடிய நோய் என்று கருதி, இந்நோய் பற்றி அறிந்தவர்களிடம் கேட்டும், அவர்கள் தெய்வக் குற்றம் எனக் கூறியதை மனத்துள் கொண்டு பல்வேறு உருவங்களையுடைய கடவுளை வாயால் வாழ்த்தியும், மெய்யால் தொழுதும், பல மலர்களைத் தூவி வழிபட்டும், அகில் முதலிய நறுமணப் பொருள்களையும் சந்தனம் முதலிய மணப்பொருள்களையும் செலுத்தி மனத்துன்பமுற்று. காரணம் அறியாமல் மயக்கமுடையவளாய் வருந்த இருக்கின்றாய். இந்நோய்க்கு காரணம் என்ன என்று நான் தலைவியிடம் வினவினதாக செவிலியிடம் கூறுகின்றாள்.

அதற்கு அவள், பெற்றோரது விருப்பமும், எனது மடனும் ஒரு சேரக் கெட, பெரிய தேரினையுடைய என் தந்தையின் அரிய காவலைக் கடந்து, யானும் தலைவனும் தேர்ந்துகொண்ட மணம் இது. இக்களவு மணத்தை நாம் பெற்றோருக்கு அறிவுறுத்தினால் பழி இல்லையெனப் பெற்றோர் நெறிப்பட இயைந்து வாரார். ஆயினும், நான் பொறுத்திருப்பேன். மறுமை உலகத்தும் நாங்கள் இருவரும் இணைவோம் என்பதனை எண்ணி, என் மான்பிணைகளும் விரும்பும் கண்களையுடைய தலைவி, கலங்கி, செயலற்று, நோயுடையவளாய் வருந்துவாள் என்று தோழி கூறுகின்றாள்.

“மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி
இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன
நாம்அறி வுறாலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கென
மான்அமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையன் இவளும் தேம்பும்"

தலைவியில் களவு வாழ்வை தலைவியே கூறுவது போல், தோழி எடுத்துக் கூறுகிறாள். இம்மையில் திருமணம் நிகழவில்லை என்றால் மறுமை வரைக் காத்திருக்கும் தலைவியின் சிறப்பை எடுத்துரைக்கின்றாள். தலைவி களவு வாழ்வில் ஈடுபட்டது தோழி முன்பே அறிந்ததே ஆகும். இருப்பினும் அவள் மீது கொண்ட அக்கறையின் காரணமாக, தானும் இப்போது அறிந்தது போல செவிலியை திருமணத்திற்கு இசைய முனைகிறாள்.

தலைவி, செவிலி, தமர் என்று அனைத்து அகமாந்தர்கள் மீதும் அக்கறை கொண்டவளாக தோழி செயல்படுகின்றாள்.

## முடிவெடுத்தல்

பல்வேறு போக்குகளை ஆய்வு செய்து தக்க போக்கினைத் தெரிவுசெய்து அதற்குக் குழுவின் ஆதரவைப் பெறும் திறன் முடிவெடுத்தல் ஆகும்.

தலைவன், தலைவி இருவரின் களவு வாழ்விற்கு முடிவு தருவதே வரைவு அல்லது உடன்போக்கு. தலைவியின் வீட்டில் களவை ஏற்றுக்கொள்ளாத போது தலைவன் தலைவியை உடன்

கொண்டு சென்று தன்னூரில் மணந்து கொள்ள விரும்புகிறான். தன் விருப்பத்தினைத் தோழியிடம் சொல்லி அவள் உதவி நாடினான். அவன் விருப்பத்தை நிறைவேற்ற தோழி உடம்படுகின்றாள்.

"முளவு மா வல்சி எயினர் தங்கை

இளமா எயிற்றிக்கு, நின் நிலை அறியச்

சொல்லினென் இரக்கும் அளவை -

வென்வேல் விடலை - விரையா தீமே!" (Parimanam & Balasubramaniyam, 2004c)

தலைவன் தலைவியை உடன் அழைத்துச் செல்லல் என்று முடிவெடுத்ததை தோழி ஏற்று கொண்டு தலைவியிடம் பேசுகிறாள்.

மேலும், களவு அலராயினும், தமர் வரைவு மறுத்தாலும், வேற்று வரைவு வரினும் தலைவியை உடன் கொண்டு போதலே தக்கது எனத் தோழி, தலைவனிடம் உடன்போக்கு வேண்டுகிறாள்.

"தினைகிளி கடிதலின், பகலும் ஒல்லும்

இரவுநீ வருதலின் ஊறும் அஞ்சுவல்

யாங்குச் செய்வாம் எம் இடும்பை நோய்க்கு? | என

ஆங்குயான் கூறிய அனைத்திற்குப் பிறிது செத்து,

ஓங்கமலை நாடன் உயிர்த்தோன் மன்ற

ஐதேய் கம்ம யானே

கழிமுதுக் குறைமையும் பழியும் என்றிசினே" (Parimanam & Balasubramaniyam, 2004b)

தாய், தங்களைத் தினைப்புனக் காவல் போக்காததால் பகற்குறி அரிதாயிற்று. இரவில் நேரும் ஏதங்களைத் தலைவி அஞ்சுதலால் இரவுக்குறியும் அரிதாயிற்று. இந்நிலையில், தாமுற்ற களவு நோய்க்கு மருந்து அறியாது வருந்தும் தலைவனிடம், உடன்போக்கு மேற்கொள்வதே சாலச் சிறந்தது என்று முடிவெடுத்து தோழி கூறுவதை காணலாம்.

தலைவியின் களவினை கற்பாக மாற்றக்கூடிய உச்சகட்ட நிலையை அடையும் போது தோழி, உடன்போக்கு மேற்கொள்ளலே சிறந்தது என்று முடிவெடுக்கின்றாள். தலைவியை மட்டுமே மனதில் கொண்டு தோழி, தனது ஒவ்வொரு முடிவையும் நிறைவேற்றுகின்றாள்.

## பொறுமை

செயல்பாட்டிற்குத் தக்க, தருணம் வரை காத்திருத்தல் பொறுமை ஆகும். உடனடிப் பலன்களை விட நாளடைவில் பெறும் பலன்கள் உயர்வாக இருந்தால் அவற்றைப் பெறக் காத்திருத்தல் பொறுமை எனலாம்.

தலைவன் பொருள் தேடி பிரிந்து சென்று, அவர் குறித்து சென்ற பருவம் வந்தும் அவன் வராமல் இருப்பதால் தலைவி ஏங்கி அழுகின்றாள். இதனைக் கண்ட தோழி தலைவியிடம் ஆற்றியிரு தலைவன் மீண்டும் வருவான் என்று எடுத்துரைக்கின்றாள்.

"இகழுநர் இகழா இள நாள் அமையம்

செய்தோர் மன்ற குறி" என, நீ நின்

பைதல் உண்கண் பனி வார்ப்பு உறைப்ப,

வாராமையின் புலந்த நெஞ்சமோடு,

நோவல், குறுமகள்! நோயியர், என்உயிர்,| என

மெல்லிய இனிய கூறி, வல்லே

வருவர் வாழி - தோழி

இன் இசை இயத்தின் கறங்கும்

கல்மிசை அருவிய காடு இறந்தோரே"

தலைவியே பிரிவால் அடையும் துன்பங்களை இகழ்ந்து பிரிபவரும். அவ்வாறு பிரிய இயலாத இளவேனிற் பருவத்தையன்றோ தாம் மீண்டும் வரும் பருவமாக உறுதிபடக் குறித்துச் சென்றார் எனக் கூறி, நீ நின் வருத்தத்தையுடைய மையுண்ட கண்கள் நீர் வார்த்து துளிப்பத் தலைவர் வாராமையால் வெறுப்புற்ற உள்ளத்தோடு வருந்தாது இரு. காட்டிடைக் கடந்து பொருளீட்டச் சென்றுள்ள நம் தலைவர், ‘இளையாளே! இங்ஙனம் துன்பம் அடையுமாறு செய்த என் உயிர் வருந்துவதாக| என மென்மை வாய்ந்த இனிய சொற்களைக் கூறிக் கொண்டு விரைந்து வருவார். அதுவரை நீ வருந்தாது பொறுமையுடன் ஆற்றிருப்பாயாக என்று தோழி தலைவியை ஆற்றுவிக்கின்றாள்.

பொருள் தேடிச் சென்ற தலைவன், முல்லை மலர்கள் அரும்பும் பொழுது வந்து விடுகிறேன் என்று பிரிந்து சென்றார். அவர் திரும்பி வருவதற்கு முன்னரே, முல்லை மலரும் வண்ணம் இந்த மழை பெய்யத் தொடங்கி, இடி இடிக்கத் தொhடங்கிற்று. ஆதலால் இந்த மேகம் அறியாமல் செய்யும் செயலிது. எனவே வருந்தாது பொறுமையாக ஆற்றியிரு என்று தலைவியை தோழி ஆற்றுவிக்கின்றாள்.

“மடவது அம்ம, மணி நிற எழிலி

‘மலரின் மௌவல் நலம் வரக் காட்டி,

கயல் ஏர் உண்கண் கனங்குழை! இவைநின்

எயிறு ஏர் பொழுதின் ஏய்தருவேம்| என,

கண் அகன் விசும்பின் மதிஎன உணர்ந்த நின்

நல் நுதல் நீவிச் சென்றோர், தம்நசை

வாய்த்து வரல் வாரா அளவை, அத்தக்

கல்மிசை அடுக்கம் புதையக் கால் வீழ்த்து,

தனி தரு தண் கார் தலைஇ,

விளி இசைத்தன்றால், வியல் இடத்தானே"

தலைவன் குறித்த பருவமானது, அவன் வரவிற்கு முன்னமே இடி இடித்து வர ஆரம்பித்துவிட்டது. எனவே தலைவன் வரும் வரை பொறுமையுடன் ஆற்றியிரு என்று தலைவியைத் தோழி நெறிப்படுத்தியமையைக் காணலாம். வழிநடத்தலில் ஆறாவதாகக் கூறப்பட்டுள்ள நம்பிக்கையூட்டல், முதலாவதாக உள்ள நம்பிக்கை என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

## திட்டமிடல்

இலக்குகளை நன்கு நிர்ணயிக்க வேண்டும். இலக்குகள் அடைவதற்கான செயல்முறைகளையும் கால கட்டங்களையும் நன்கு திட்டமிடல் வேண்டும்.

தலைவன் வரைவிற்கு பின்பு, பரத்தை விருப்பம் கொண்டு பிரிந்து செல்கின்றான். தான் தவறு இழைக்கின்றோம் என்று எண்ணி, தலைவியின் வீட்டிற்கு மீண்டு வருகின்றான். அத்தலைவன் தோழியிடம், யான் உங்களைப் பிரிந்து வாழும் நாட்களில் நீங்கள் யாது| எண்ணியிருந்தீர்கள்? என்று வினவினான்.

'யாமே,

‘நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்

யாணர் ஊரன் வாழ்க!

பாணனும் வாழ்க!| என வேட்டேமே" (Parimanam & Balasubramaniyam, 2004c)

தலைவன் தங்களை விட்டுப் பிரிந்து பரத்தமை மேற்கொண்ட போது, எங்கள் தலைவனும், பரத்தமைக்கு உதவிய பாணனும் வாழ்க என்று விரும்பி வாழ்த்தினோம் என்று கூறினாள். மேலும் தலைவன், தலைவியொடு கொண்ட காதலுறவு பிறவிதொறும் தொடர்வதாக! ௌஎன்று எண்ணிதாக தோழி கூறுகின்றாள்.

“யாமே

பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்

தண்துறை ஊரன் கேண்மை வழிவழிச்

சிறக்க! என வேட்டேமே" (Parimanam & Balasubramaniyam, 2004c)

தலைவன் தன் இல்லத்திலேயே தங்கி, இல்லறத்தில் பொழிதல் வேண்டும் என்று எண்ணியதாகத் தோழி விளக்குகின்றாள்.

“தன் மனை

வாழ்க்கை பொலிக! என வேட்டேமே" (Parimanam & Balasubramaniyam, 2004c)

என்ற பாடலடியின் மூலம் அறியலாம். அதுமட்டுமின்றி தலைவனுடைய மார்பானது, ஊர்ப்பொது நிலம்போல் பல்பெண்டிர் நுகர்ச்சிக்கு உரியதாகாது ஒழிக என்றும், தலைவனுடைய தேர் தலைவியின் இல்லத்தை விடுத்து பிறர் பெண்டிர் இல்லத்தில் நிற்பதை ஒழித்தல் வேண்டும் என்றும் எண்ணியதாக தோழி விவரிக்கின்றாள்.

'மார்பு பழனம் ஆகற்க என வேட்டேமே" (Parimanam & Balasubramaniyam, 2004c)

“தண் துறை ஊரன் தேர் எம்

முன் கடை நிற்க| என வேட்டேமே" (Parimanam & Balasubramaniyam, 2004c)

தலைவனின் பரத்தைமை ஒழுக்கம் தவறு என்று அவன் எண்ணும் வண்ணம் தோழி, அவன் மனம் மாறும் வண்ணம் திட்டமிட்டு பேசி, தலைவியின் நிலையை எடுத்துரைக்கின்றாள்.

பரத்தை ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன், தன் தவற்றை எண்ணி வருந்தி மனம் திரும்ப வேண்டும் என்று தோழி எண்ணுகிறாள். எனவேதான், உன் நலனை எண்ணி நிற்றோம் என்று பல காரணங்களை திட்டமிட்டு கூறி செயல்படுகின்றாள்.

## தெளிவு

தலைவியின் களவு கற்பாக மாற்றம் பெற தோழி தெளிவாக செயல்படுகின்றாள். தமரிடம் தலைவியின் களவினை தெளிவாக விளங்கும்படிச் செய்கின்றாள். அறத்தொடுநிற்றல், வரைவுகடாதல், நொதுமலர் வரைவு என்று எல்லாச் சூழல்களிலும் தெளிவான தோழியின் சிந்தனை புலப்படுகின்றது.

“சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் தெளிவு வேண்டும்”

தலைவன், தலைவியின் தமரிடம் பெண் கேட்டுத் தூதனுப்பியபொழுது அவர்கள் உடம்படவில்லை. இந்நிலையில் தலைவியின் கற்பிற்குச் சிதைவு வராமல் காக்கும் பொருட்டுத் தோழி, தலைவன் தலைவியை மணந்து கொள்ளுதற்கு ஏற்ற தகுதிகள் அனைத்தும் உடையவன். அவனுக்கு பெண் கொடுத்தல் நம் குடிக்கு நன்மையே தரும். அதுமட்டுமின்றி தலைவன் தலைவி கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் உயிர்விட நேரிடும். அவரைத் தவிர உயிர் வேறு இல்லாத தலைவியே நீயும் வாழ்வில்லை என்று உயிர் விடத் துணிவாய் என்று தமர் அறிய தெளிவாக பேசுவதை,

"அம்ம வாழி, தோழி! நம் ஊர்

நிரந்து இலங்கு அருவிய நெடுமலை நாடன்

இரந்து குறையுறாஅன் பெயரின்,

என் ஆவது கொல் - நம் இன் உயிர் நிலையே?" (Parimanam & Balasubramaniyam, 2004c)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

ஊரவரின் அலர் அதிகரிக்கும் போதும், இற்செறிப்பின் போதும், திணையானது முதிர்ச்சியடையும் போதும், அன்னை வெறியாட்டு நிகழ்த்த முற்படும் போதும், நொதுமலர் விரைவின் போதும் தோழி தன் தெளிவான சொற்களால் தலைவனிடம் வரைவு கடாவி நிற்கின்றாள்.

"குன்ற நாட! நீ அன்பிலை ஆகுதல்

அறியேன் யான், அஃது அறிந்தனென் ஆயின்

அணிஇழை உண்கண், ஆய்இதழ்க் குறுமகள்

மணிஏர் மாண்நலம் சிதைய

பொன்நேர் பசலை பாவின்று மன்னே"

என்ற பாடலடிகளில் தலைவிபால் உனக்கு அன்பிலை என்று தலைவனை குறை கூறுவது போல் கூறி தலைவியை மணந்து கொள்ளுமாறு குறிப்பிடும் தோழியின் சொல் வன்மையால் அவளின் தெளிவான சிந்தனை புலனாகிறது.

தலைவியின் நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படும் தோழி, அனைத்து சூழலிலும் தெளிவுடன் செயல்படுகின்றாள். தெளிவான முடிவு எடுக்கின்றாள். தலைவனைச் சாடும் சூழலில் கூட தெளிவாக சிந்தித்து செயல்படும் ஆற்றல் கொண்டவளாக தோழித் திகழ்கின்றாள்.

## முடிவுரை

அகமாந்தரின் வாழ்வில் தோழியின் கதாபாத்திரம் முக்கியபங்கு பெறும் பாத்திரம் ஆகும். தன் ஆளுமைத்திறனால் அகமாந்தர்களை ஆட்கொள்ளும் திறனுடையவளாகத் தோழி திகழ்கின்றாள். தோழியின் மதிப்பிட முடியாத ஆளுமைத் திறனானது தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்கு உதவுகின்றது. சூழ்நிலைக்குத் தக்கப்படி தலைவனிடம் வரைவு கடாதல், வாயில் மறுத்தல், சிறைப்புறமாக பேசுதல் போன்ற சூழல்களிலெல்லாம் தன் ஆதிக்கத்திறனை வெளிப்படுத்தும் திறன் உடையவளாக உள்ளாள். உளவியலறிஞர்கள் குறிப்பிட்ட ஆளுமைப்பண்பானது, சங்க இலக்கியத் தோழியுடன் பொருந்தியுள்ளது. தோழி தனது சொல், ஆற்றல் சிந்தனை, நுண்ணறிவு போன்ற பல்வேறு ஆளுமைத்திறனால் தன் செயல்களை வெளிப்படுத்துகின்றாள்

## References


Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004a) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004b) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004c) Ainkurunuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004d) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sundara Seenuvasan, S. (2008) Aalumai Membaadu, Thamarai Publications, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License